**செய்தி வெளியீடு எண் : 310** **நாள்: 16.06.2009**

**கடந்த மூன்று ஆண்டுகளில் 1,175 கோடி ரூபாய் செலவில்**
**சுனாமி மறுவாழ்வுப் பணிகள்**
**மாநில அளவிலான வழி காட்டும் குழு கூட்டத்தில்**
**மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தகவல்**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் நடைபெற்று வரும் சுனாமி மறு சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டப் பணிகளானது, அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்துச் செம்மையுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. குறித்த காலத்திற்குள்ளாக இப்பணிகளை நிறைவேற்றிடும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாநில அளவில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை தலைவராகவும், ஏனைய தொடர்புடைய துறையின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ள, மாநில அளவிலான வழி காட்டும் குழுவினை அமைத்து, பணிகளை விரைவு படுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களைத் தலைவராகக் கொண்ட, மாநில அளவிலான வழி நடத்தும் குழுவின் ஐந்தாவது கூட்டம் இன்று (16.06.2009) காலை 11 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களும், வழி நடத்தும் குழுவின் உறுப்பினர்கள் மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி திரு.எஸ். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு சுற்றுச் சூழல்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி. சாமி, தலைமைச் செயலர் திரு. ஸ்ரீபதி மற்றும் அரசுத்துறையின் முதன்மைச் செயலர்கள், மற்றும் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர், முதன்மைச் செயலர்/சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சிறப்புப்பணி அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு) மற்றும் தொடர்புடைய துறையின் துறைத் தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வழிநடத்தும் குழுவின் தலைவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில், 'சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில், மத்திய அரசு, பிரதமரின் தேசிய நிவாரணநிதி, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பன்னாட்டு வேளாண்மை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுநிதி ஆகியவற்றின் உதவியோடு **5,074.09** கோடி ரூபாய் செலவில், பல்வேறு நீண்டகால அடிப்படையிலான திட்டங்களானது தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அரசுபொறுப் பேற்ற மூன்று ஆண்டுகளில், ஏறத்தாழ 1,175 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தின் கடலோரப்பகுதியில் கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் அனைத்தும் கடலோர உப்புக்காற்று மற்றும் அலைகளால் பாதிக்கப்படாத வகையில் தகுந்த முறையில், அண்ணா பல்கலைக்கழக கட்டட பொறியியல் ஆய்வு மையம் போன்ற தகுதி வாய்ந்த பல்வேறு அமைப்புகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டு, அதற்கேற்ற வகையில் தற்பொழுது கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார்கள்.

மேலும் தற்பொழுது நடைபெற்று வரும் எஞ்சியுள்ள பணிகள் அனைத்தும் விரைவாக செயல்படுத்தப்பட்டு, அவைகளெல்லாம் உரிய காலத்திற்குள்ளாக முடிக்கப்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமாறும்' கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, செயல்படுத்தப் பட்டு வரும் திட்டங்கள் குறித்து துறை வாரியான பணி முன்னேற்ற அறிக்கையும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

**கடந்த மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள்**

**நிரந்தர குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் – பகுதி I**

- பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில் முழுமையாக பாதிக்கப்பட்டு, புதிதாக கட்டப்பட்டு வரும் **53,282** வீடுகளில், **31.05.2009** வரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள **39,684** வீடுகளில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சார்பில் **30,302** வீடுகளும், அரசின் சார்பில் **9,382** வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு **37,904** வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- **கட்டப்பட்டுள்ள வீடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான மின் இணைப்பு, சாலை வசதி, தெரு விளக்கு, குடிநீர், சுகாதார வசதி ஆகியவற்றிற்காக 268.46 கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது.**
- சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர், திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் **2,648** புதிய அடுக்குமாடி குடியிருப்புகளும், செம்மஞ்சேரியில் **4,058** குடியிருப்புகளும், தாழங்குப்பம் பகுதியில் **476** குடியிருப்புகளும் வழங்கப்பட்டுள்ளது.
- சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில், கட்டப்படவுள்ள **11,520** வீடுகளில், திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலையத்திற்குச் சொந்தமான நிலத்தில் **3,616** அடுக்குமாடி குடியிருப்புகளும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் **2,048** அடுக்குமாடி குடியிருப்புகளும், நொச்சிக்குப்பம் முதல் ஸ்ரீனிவாசபுரம் வரை பழுதடைந்துள்ள அடுக்குமாடி வீடுகள் இடிக்கப்பட்டு, அதே இடத்தில் **5,856** புதிய அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டப்படவுள்ளன.
- இவைதவிர, கடலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சுனாமியினால் பாதிக்கப்படாத பழங்குடியினத்தைச் சார்ந்த இருளர் சமுதாய மக்கள், விவசாயக் கூலிகள், கடலுக்கு மிக அருகில் இருப்போர் ஆகியோருக்காக கூடுதலாக **6,019** வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு, கடந்த **31.05.2009** வரையில் **5,954** வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## நிரந்தர குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் – பகுதி II

### இந்தியாவிலேயே முதன் முறையாக எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் அனைத்து பேரிடர்களையும் தாங்கிடும் குடியிருப்புகள்

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அரிய யோசனையின் அடிப்படையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முதன்முறையாக, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய இடங்களிலுள்ள குடிசை வீடுகள் மற்றும் இப்பகுதிகளில் “இந்திரா நினைவு குடியிருப்புகள்” மற்றும் அரசு நிதியுதவியுடன், கடந்த 1.1.2006 அன்று 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள வீடுகளில் வசிப்போருக்கு, அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்களையும் தாங்கிடக் கூடிய வகையிலான புதிய வீடுகளை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில், கட்டப்பட வேண்டிய வீடுகள் **41,411** இந்த எண்ணிக்கையில் இந்திரா நினைவு குடியிருப்பு போன்ற **11,539** வீடுகளும் அடங்கும்.
- இத்திட்டத்தின்கீழ், இரண்டு கட்டங்களாக கட்டப்படவுள்ள வீடுகளில் முதற்கட்டமாக, மைய அரசின் “இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்” கீழ், **772** கோடி ரூபாய் செலவில், **24,411** வீடுகள் கட்ட அரசாணை வழங்கப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையினரால் ஏறத்தாழ **18,056** வீடுகளுக்கும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினரால் **3,585** வீடுகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்பட்டு, **19,765** வீடுகளின் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவற்றில் **1,976** வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன
- இரண்டாம் கட்டமாக, உலக வங்கியின் நிதியுதவியோடு, கிரமப்புறப் பகுதிகளில், அதே இடத்தில் **17,000** வீடுகள் கட்டப்படவுள்ளன.

### அடிப்படை கட்டமைப்பு வசதிகள்:

- இராஜீவ்காந்தி மறுவாழ்வு திட்டத்தின் கீழ், பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் **362.67** கோடி ரூபாய் செலவில் **55** பாலங்கள் மற்றும் **399.57** கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ப்பட்டு வருகின்றன.
- **கடந்த மூன்றாண்டுகளில் 104.13 கோடி ரூபாய் செலவில் 399.57 கிலோ மீட்டர் சாலைகள், 12.04 கோடி ரூபாய் செலவில் 29 பாலங்கள் கட்டி முடிப்பப்பட்டுள்ளன.**
- நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் **28.02** கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் **2** உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில், **59.28** கோடி ரூபாய் செலவில் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்களை ஆழப்படுத்துதல் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளில் ஏறத்தாழ **90** சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**வேளாண்மை மற்றும் வனம்:**

- **13.69** கோடி ரூபாய் செலவில், பாதிக்கப்பட்ட **8,844.35** ஹெக்டேர் விளை நிலங்களும், **24.00** கோடி ரூபாய் செலவில், உலக வங்கியின் நிதியுதவியுடன் **4,778.06** ஹெக்டேர் நிலப்பரப்பில் கடலோரக் காடுகளும், **2,162** ஹெக்டேர் சதுப்பு நிலக் காடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

**பாதிக்கப்பட்டோர் மற்றும் மீனவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள்:**

- பாதிக்கப்பட்ட கடலோர 13 மாவட்டங்களில், **591** கிராமங்களில் **152.16** கோடி ரூபாய் செலவில், கட்டு மரம், வள்ளம், வலைகள், மீன்பிடி படகுகள், இயந்திரப் படகுகள் போன்ற நிவாரண உதவிகளோடு, **59.10** இலட்சம் ரூபாயில், கால் பந்து, கூடைப் பந்து, கேரம், சதுரங்கம் போன்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு **42,000** மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.
- இவைதவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்டு ஏற்கனவே பயனடைந்த மீனவர்களுக்கு கூடுதலாக, **110.36** கோடி ரூபாய் செலவில் ஐஸ் பெட்டிகள், அதிக பளு ஏற்றத்தக்க சைக்கிள், உயிர் பாதுகாப்பு கவசம், ஒளி விளக்குகள் ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டு, **42,000** மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.
- வலைகளுக்காக பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் **10,000** ரூபாய் இரண்டு தவணைகளில் வழங்கப்பட்டுள்ளது.
- இவைதவிர, **5,635** மீனவர்களின் **19** கோடியே **56** இலட்சம் ரூபாய் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி. மேலும், தமிழக அரசின் வேண்டுகோளினையேற்று, மீனவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில், அசல் தொகை தள்ளுபடிக்காக **3.36** கோடி ரூபாய் நிதியினை பிரதமர் அலுவலகம் விடுவித்துள்ளது.

**வாழ்வாதாரத் திட்டங்கள்:**

- சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை (livelihood) மேம்படுத்திடும் வகையில் **223.39** கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- நாளதுவரையில் உருவாக்கப்பட்டுள்ள **61,995** மகளிர் சுயஉதவிக் குழுக்களில், **38,284** குழுக்களுக்கு சுழல் நிதியுதவியாக **102.60** கோடி ரூபாயும், **3,875** குழுக்களுக்கு பொருளாதார நிதியுதவியாக **39.57** கோடி ரூபாயும், **35,732** உடல் ஊனமுற்றோருக்கான மானிய நிதியுதவியாக **35.73** கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், **1,55,420** குழு உறுப்பினர்களுக்கு **11.85** கோடி ரூபாய் செலவில், பல்வேறு திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, **மூன்றரை ஆண்டுகளில் 210.72 கோடி ரூபாய் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

**மாணவர்கள் பயன்பெற கல்வி சார்ந்த உதவி திட்டங்கள்:**

- மூன்று ஆண்டுகளில் **58,790** மாணவர்கள் பயன்பெறும் வகையில் **30.09** கோடி ரூபாய் அரசின் சார்பில் கல்வி மற்றும் சிறப்பு கட்டணம்
- சுனாமியினால் பெற்றோர்களில் ஒருவரை இழந்த **1,713** குழந்தைகளின் பெயரில், ஒவ்வொரு குழந்தைக்கும் தலா **51,000** ரூபாய் வீதம், **8** கோடியே **74** லட்சம் ரூபாய் வங்கியில் நிரந்தர வைப்புத் தொகை.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் **1**–ஆம் வகுப்பு முதல் **10**–ஆம் வகுப்பு வரை தொடர்ந்து பயில, மாதந்தோறும் **300** ரூபாய் கல்வி உதவித் தொகை
- மூன்று கல்வி ஆண்டுகடளில் ஏறத்தாழ, **1,23,697** மாணவர்களுக்கு நாளது வரையில், கல்வி உதவித் தொகையாக **33** கோடியே **27** இலட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

**சமூக பாதுகாப்புக்கான அடிப்படை கட்டமைப்புத் திட்டம்:**

- இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் **63** இடங்களில் **(TRAUMA CARE CUM RECREATION CENTERS)** கட்ட **1.90** கோடி ரூபாயும், முதலுதவிப் பெட்டிகள் வழங்கிட **9.40** கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

**சுகாதார காப்பீட்டுத் திட்டம்:**

- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுகாதார காப்பீடு செய்திட 'யுனைடெட் இந்தியா காப்பீடு' நிறுவனத்துடன் இணைந்து, பிரதமர் அலுவலகம் வழங்கியுள்ள **7** கோடியே **77** இலட்சம் ரூபாய் நிதியுதவியில் நாளது வரையில், ஒரு இலட்சத்து **56** ஆயிரம் குடும்பங்களுக்கு **7** கோடியே **80** இலட்சம் ரூபாய் நிதியுதவியில் காப்பீடு வசதி பெற்றுள்ளனர்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் செயல்படுத்தப் பட்டு வரும் பணிகள்:**

- **15** மாநிலங்களைச் சார்ந்த **160** நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கியுள்ள **23.13** கோடி ரூபாய் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாயக்கூடம், ஆதரவற்றோர் இல்லம், முதியோர் இல்லம், புயல் பாதுகாப்பு மையம், பள்ளி கட்டடம் கட்டுதல், மீன் உலர்த்துமிடம் ஆகியவற்றின் பணிகள் அனைத்து முடிவுறும் தறுவாயில் உள்ளன.

**(ஒம்) டாக்டர் ந. சுந்தரதேவன் இ.ஆ.ப.,**
**முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர்**
**வருவாய் நிருவாகம் எழிலகம்**
**சென்னை 5**

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**